# உலகளாவிய ஆயத்த ஆடை உற்பத்தி சங்கிலிகளில் கோவிட் -19 ஏற்படுத்திய ஒப்பிட இயலாத தாக்கங்கள்

## எத்தியோப்பியா, ஹோண்டுராஸ், இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளில் கிடைத்த சான்றுகள் (தரவுகள்)

**Authored by**
Genevieve LeBaron
Penelope Kyritsis
Perla Polanco Leal
Michael Marshall

The University Of Sheffield. Department Of Politics & International Relations.
speri.
WRC WORKER RIGHTS CONSORTIUM

# சுருக்கத்திரட்டு

## ஆய்வறிக்கையின் பின்னணி

கோவிட்-19 பெருந்தொற்றுக்கு மத்தியில் ஆயத்த ஆடை உற்பத்தி சங்கிலிகளில் (Supply Chains) பிணைந்துள்ள தொழிலாளர்களின் வேலைச்சூழல் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் மோசமடைந்து வருவதை குறிப்பாக கொத்தடிமை போன்ற கட்டாய உழைப்புக்கும் பல்வேறு இன்னலுக்கு ஆளாகும் சூழலும் அதிகரித்துவருவதை இந்த ஆய்வறிக்கை ஆவணப்படுத்துகிறது.

உலகளாவிய ஆயத்த ஆடை உற்பத்தி/விநியோகச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் வணிக அமைப்புகள் மீது கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கத்தை ஆராய்வதற்காக இந்த ஆய்வை எத்தியோப்பியா, ஹோண்டுராஸ், இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நான்கு நாடுகளில் மேற்கொண்டோம். பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா மற்றும் அதற்கு அப்பால் உள்ள நுகர்வோர் பயன்படுத்தும் ஆயத்த ஆடை பிராண்டுகளின் ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முக்கியமான மேற்கூறிய நான்கு நாடுகளில் ஆயத்த ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வை மேற்கொண்டோம்.

எங்கள் ஆராய்ச்சிக்கு நவீன அடிமைத்தனம் மற்றும் மனித உரிமைகள் கொள்கை மற்றும் சான்றுகள் மையம் (Modern Slavery and Human Rights Policy and Evidence Centre) நிதியளித்தது. 2020 அக்டோபர் மற்றும் மே 2021 க்கு இடையிலான காலகட்டத்தில் இந்த ஆய்வை மேற்கொண்டோம்.

சவால்களும் சிக்கல்களும் நிறைந்த பெருந்தொற்று காலச் சூழலில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விற்கு பணிச்சூழலில் நிலவக்கூடிய மோசமான தாக்கங்கள் குறித்தச் சான்றுகள், தரவுகள் குறைவாகவும், சிறுசிறு சம்பவம்/நிகழ்வுகளாகவும் மட்டுமே கிடைத்தன. அவை பெருந்தொற்று தொழிலாளர்கள் மீது ஏற்படுத்திய எதிர்மறை தாக்கத்தை, பரந்த வடிவங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்வதற்கு குறைந்தபட்ச சாத்தியக்கூறுகளே அமைந்தது.

ஆயத்த ஆடை உற்பத்தி/விநியோகச் சங்கிலிகளில் கோவிட் -19 இன் தாக்கம் குறித்து மேற்கொள்ளப்பட்ட மற்ற ஆராய்ச்சிகள் தொழிலாளர்களின் குரல்களை விட்டுவிட்டு நிறுவனங்களின் மீது அதிகமான கவனம் செலுத்தின. உண்மையில் உற்பத்தி/விநியோகச் சங்கிலியில் பெருந்தொற்றின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதில் விநியோகச் சங்கிலிகளின் அடிப்படை அலகான உழைப்பாளர்களே பாதிப்புகளை விளக்குவதற்கான பொருத்தமான நிலையில் உள்ளனர்.

எனவே, நாங்கள் விரிவான அளவில் முதற்கட்ட ஆய்வை மேற்கொண்டோம். அதற்காக பன்னாட்டு அளவில் மின்னனு முறையில் (Digital Survey) எண்ணிக்கை திரட்டுக்கான கணக்கெடுப்பை நடத்தினோம். எத்தியோப்பியா, ஹோண்டுராஸ், இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நான்கு நாடுகளில் உள்ள 1140 தொழிலாளர்கள் மத்தியில் கணக்கெடுப்பை நடத்தினோம். மேலும், அரசு தரப்பினர், ஆயத்த ஆடை பிராண்டுகளின் பிரதிநிதிகள், இத்துறையில் சமூக நலத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வல்லுனர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 20 பேரையும் 60 தொழிலாளர்களையும் விரிவாக நேர்காணல் செய்து விளக்கங்களைப் பெற்றோம். சுமார் 21 பின்னலாடை நிறுவனங்களின் 2020-21 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள், கனடா, எத்தியோப்பியா, ஹோண்டுராஸ், இந்தியா, மியான்மர், பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் பெருந்தொற்றினால் ஏற்பட்ட இடர்பாடுகளை எதிர்கொள்வதற்காக தொழில் நிறுவனங்களுக்கு அரசுகள் வழங்கிய நிவாரணங்கள் குறித்த தகவல் தொகுப்புகளையும் இந்த ஆய்விற்காகப் பயன்படுத்தினோம்.

பெருந்தொற்றின் காலத்தில் பணியில் தொடர்ந்து அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பு மறுக்கப்பட்ட தொழிலாளர்களின் தரவுகளையும் அவர்கள் தந்த கூடுதல் விளக்கங்களையும் ஆய்விற்கு உட்படுத்தினோம். அவர்களது வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை குறிப்பாக வேலை உத்திரவாதம், வருமானம், கட்டாய உழைப்புக்கு (அ) உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகக்கூடிய நிலை, தனி நபர் மற்றும் குடும்பத்தின் கடன் அளவு குறித்த குறியீடுகள் எந்த அளவிற்கு மாறியுள்ளன என்று ஆரய்ந்தோம்.

விநியோகச் சங்கிலிகளில் பெருந்தொற்றின் தாக்கம் குறித்த சமீபத்திய ஆய்வுகளில் தொழிலாளர்களின் முன்னோக்குகள் மற்றும் குரல்கள் (Workers Perspectives & Voices) கவனத்தில் கொள்ளப்படாத சூழலில் இந்த அறிக்கை தொழிலாளர் மட்டத்திலான தரவுகளில் உரிய முக்கியத்துவம் செலுத்தியுள்ளது.

# ஆய்வில் கண்டறியப்பட்டவற்றின் சுருக்கம்

பெருந்தொற்று காலத்தில் ஆயத்த ஆடைத் தொழிலாளர்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகள் கடுமையாக மோசமடைந்துள்ளன என்பதைக் காண்கிறோம். நாங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நான்கு நாடுகளிலும், தொழிலாளர்கள் வருவாய் இழப்பையும், வேலை நிலைமைகளில் (Working Conditions) கடுமையான சரிவையும் சந்தித்துள்ளனர். குறிப்பாக அதிகமான அளவிற்கு கட்டாய உழைப்பு (அ) உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாவதை காணமுடிகிறது.

பெருந்தொற்று காலத்தில் ஒரே நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றும் தொழிலாளர்களுக்கும், ஒப்பந்தங்கள் முறிக்கப்பட்டு வேலை இழந்தவர்கள் பெருந்தொற்று காலத்திற்கு முந்தைய வேலைச் சூழலை ஒப்பிடும்பொழுது மோசமானதும் வருவாய் குறைந்ததுமான புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கும் மேற்கூறிய பிரச்சினைகள் பரவலாகக் காணப்படுகிறது. ஆயினும் பிரச்சினைகளின் வடிவங்கள் மற்றும் தீவிரத்தன்மையானது, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாடு, தொழிலாளர்களின் வயது, பாலினம், இனம் மற்றும் சிறு இனக்குழுக்கள், (Race & Ethnicity) தொழிற்சங்க உறுப்பினரா, வேலைக்காக இடம்பெயர்ந்து வந்தவரா, எத்தகைய பணியில் ஈடுபட்டுள்ளார் போன்ற தனிப்பட்ட காரணிகளைப் பொருத்தும் உற்பத்தி/விநியோகச் சங்கிலியின் வணிக இயக்கவியல் சார்ந்த காரணிகளைப் பொருத்தும் வேறுபடுகின்றன.

### வேலை பாதுகாப்பு

— எங்கள் கணக்கெடுப்பில் உள்ள 1140 தொழிலாளர்களில்; 72% பேர் பெருந்தொற்று காலத்தில் அதே தொழிற்சாலையில் பணிபுரிந்துள்ளனர், 17% பேர் வேலையை இழந்து புதிய வேலையில் சேர்ந்தவர்கள், 11% பேர் வேலை இழந்து தற்போது வேலையற்றவர்கள்.

— 13% தொழிலாளர்கள் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்தில் ஏற்படுத்தியிருந்த ஒப்பந்தங்கள் முறிக்கப்பட்டதால் வேலையை இழந்துள்ளனர். இத்தகைய ஒப்பந்த முறிப்பானது பெரும்பாலான தொழிலாளர்களின் வேலை இழப்பிற்கும் தற்போது அவர்கள் வேறு வேலையில் ஈடுபட்டிருப்பதற்கும் காரணமாகவுள்ளது. ஒப்பந்த முறிப்பால் வேலை இழந்த 80% தொழிலாளர்கள் முழுமையான இழப்பீடு வழங்கப்படாதவர்கள்; அவர்களுள் மூன்றில் இரண்டு பங்கினர் சிறு இழப்பீட்டுத் தொகை கூட வழங்கப்படாதவர்கள்.

— வேலை இழந்த தொழிலாளர்களில் அவர்தம் வேலை இழப்பிற்கு அவர்களின் தனிப்பட்ட சமுதாய காரணிகள், இனச் சிறுபான்மை அல்லது சாதிப்படிம நிலையில் அடித்தட்டில் இருப்பது போன்ற காரணங்கள் "மிக அதிகமான சாத்தியம்" உள்ளவை என்றும்; தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருப்பது பணிப்பாதுகாப்பை உறுதி செய்வதால் அது வேலை இழப்பிற்கு "மிக குறைவான சாத்தியம்" உள்ள காரணி என்றும் அறியமுடிகிறது.

### ஊதியங்கள் மற்றும் பணி நிலைமைகள்

— அனைத்து தொழிலாளர்களின் சராசரி மாத வருமானம் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்தை ஒப்பிடும்பொழுது 627.45 அமெரிக்க டாலராக இருந்தது தற்போது 560.36 அமெரிக்க டாலராக குறைந்துள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தொழிலாளர்கள் சராசரியாக 11% வருமான இழப்பை சந்தித்துள்ளனர். இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்படும் அனைத்து பணத் தொகைகளையும் அமெரிக்க டாலர்களில் தந்துள்ளோம். அவ்வாறு கணக்கிடும்பொழுது டாலர் vs உள்நாட்டு பணபரிவர்த்தனை வீதத்திற்கு பதிலாக வாங்கும் சக்தி சமநிலைக்கு (Purchasing Power Parity - PPP) மாற்றி மதிப்பிட்டுள்ளோம். இதன் பொருள், இந்த அறிக்கையில் உள்ள தொழிலாளர் வருவாய் புள்ளிவிவரங்கள் முந்தைய WRC வெளியீடுகளை விட அதிகமாக இருக்கலாம். (முறையைப் பார்க்கவும் - See the Methodology)

— பெருந்தொற்றின்போது தொழிலாளர்கள் கட்டாய உழைப்பு (அ) உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாவது குறித்த முக்கிய குறிகாட்டிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பதிலளித்தவர்களில் தற்போது பணிபுரியும், 356 (35%) தொழிலாளர்கள் வாய்மொழி துஷ்பிரயோகம் எதிர்கொண்டதாகவும்; 245 (34%) அச்சுறுத்தல்கள் மற்றும் / அல்லது மிரட்டலை எதிர்கொண்டதாகவும் தெரிவித்தனர்; 224 (22%) நியாயமற்ற ஊதியக் குறைப்புகள் அல்லது நிறுத்திவைப்புகள் நடந்தது என்றும்; 196 (19%) பேர் தண்ணீர் மற்றும் கழிப்பறை வசதிகளை பெறுவதில் தடை ஏற்பட்டிருந்ததாகவும்

தெரிவித்தனர்; பதிலளித்தவர்களில் பலருக்கு இந்த கடுமையான நிலைமைகள் புதியவை மற்றும் பெருந்தொற்றுக்கு முன்னர் அனுபவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். ஒரு சிலர் இந்த பிரச்சினைகள் பெருந்தொற்றுக்கு முன்பே நிகழ்ந்தன, ஆனால் அவை தீவிரத்தன்மை மற்றும் எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தன என்றனர்.

— தற்போது பணிபுரிவதிவதாக கூறியவர்களில் 399 (39%) பேர் தனிநபர் பாதுகாப்பு கருவிகளில் (PPE) குறைபாடு இருந்ததாகவும் தனிமனித இடைவெளியை கடைபிடிப்பதில் ஒழுங்கின்மை நிலவியது எனவும் தெரிவித்தனர்.

— பெருந்தொற்றின்போது வேலைகளை (இழந்ததால்) மாற்றிய தொழிலாளர்களில், மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் புதிய வேலைச் சூழலனாது முன்னர் பார்த்த வேலையை விட மோசமானதாக இருப்பதாகக் கூறினர். குறிப்பாக குறைந்த ஊதியம், குறைந்த வேலை பாதுகாப்பு மற்றும் அதிக சிரமம் கொண்டதாகவும் பாதுகாப்பு அற்றதாகவும் உள்ளதாகத் தெரிவித்தனர். மேலும், வேலைகளை மாற்றிய 68% தொழிலாளர்களுக்கு எழுத்து அல்லது வாய்வழி ஒப்பந்தம் இல்லை. தங்கள் புதிய வேலையில் ஒப்பந்தத்தைப் பெற்ற தொழிலாளர்களில் 19% பேர் தங்கள் புதிய ஒப்பந்தத்தின் விதிமுறைகள் முந்தைய ஒப்பந்தத்தை விட மோசமானவை என்று கூறியுள்ளனர்.

## தொழிலாளர்களின் கடன் சுமை

— உணவு, வீட்டுவசதி, மருத்துவ செலவுகள் மற்றும் பிற அடிப்படைத் தேவைகளை ஈடுகட்ட தொழிலாளர்கள் கடன் வாங்குவது அதிகரித்து வருகிறது. இந்த 'கடன் வாங்கும் போக்கு' அவர்தம் வேலைச் சூழல் மற்றும் வாழ்வாதார உத்திகளை தீர்மானிக்கக்கூடிய (மேலும் கடினமான சூழலுக்கு தள்ளக்கூடிய) முக்கியமான காரணியாகும். பெருந்தொற்று காலத்தில் தொழிலாளர்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கூட போதுமான ஊதியம் பெறவில்லை. அரசு மற்றும் தன்னார்வ/குடிமைச் சமூக அமைப்புகளிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றனர்.

— பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்தை ஒப்பிடும்பொழுது ஒரு தொழிலாளரின் சராசரி கடன் அளவு 1835.23 அமெரிக்க டாலரில் இருந்தது. தற்போது 2125.48 அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. இது 16% அதிகரிப்பு ஆகும். இக்கடன் சுமை எத்தியோப்பியாவில் சராசரி கடன் அளவு இரு மடங்கும், மியான்மரில் 34%, இந்தியாவில் 21%, ஹோண்டுராஸில் 6% அளவிற்கும் அதிகரித்துள்ளது.

— பெருந்தொற்று காலத்தில் 60% க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடன் வாங்கியுள்ளனர்; 1083 தொழிலாளர்களின் கடன் நிலைகள் குறித்த தரவுகளை ஆய்வு செய்ததில் 451 பேரின் (42%) கடன் அளவு அதிகரித்ததை காணமுடிகிறது.. பெருந்தொற்று காலத்தில் மென்மேலும் கடன் வாங்குவது என்பது அவர்கள் கட்டாய உழைப்புக்கு (அ) உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகும் போக்குடன் நேரடி தொடர்புடையது.

— நாங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொண்ட பெரும்பாலான தொழிலாளர்க ளுக்கு, பெருந்தொற்று ஆரம்பிக்கும் முன்னர் எந்த சேமிப்பும் இருந்திருக்கவில்லை. சிறிய அளவில் சேமித்திருந்த தொழிலாளர்களின் சராசரி சேமிப்பு அளவு 409.18 அமெரிக்க டாலரிலிருந்து 136.71 அமெரிக்க டாலராக வீழ்ச்சியடைந்துள்ளது. சிறிதளவு கூட சேமிப்பு இல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை தற்போது 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## வணிக நிறுவனங்களும் அரசின் தலையீடுகளும்

— உலகளாவிய ஆயத்த ஆடை உற்பத்தி/விநியோகச் சங்கிலியின் மையபுள்ளியான முக்கிய பேஷன் பிராண்டுகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் உள்ளிட்ட பன்னாட்டு பின்னலாடை பெருநிறுவனங்கள் (MNCs) மாறுபட்ட வணிக விளைவுகளை எதிர்கொண்டுள்ளன. விற்பனை மற்றும் பண நிலைகளில் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது சில நிறுவனங்கள் இலாபங்களை இழந்துள்ளன; மற்றவர்களுடைய இலாபம் வரலாற்று உச்சத்தை எட்டியுள்ளன.

— இத்தொழிற்துறை பிரதிநிதிகளிடம் நேர்காணல் செய்து திரட்டிய தகவல் ஆய்வை உற்று நோக்கியதில் அதிர்ச்சியூட்டும் சில நகர்வுகளைக் காண முடிந்தது. அதாவது பெரும்பாலான பன்னாட்டு ஆயத்த ஆடை பெருநிறுவனங்கள் (MNCs) பெருந்தொற்றால் நிகழ்ந்த வணிக இழப்புகளையும் (அ) இழப்பிற்கான சிறு வாய்ப்புகளையும் கூட தாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை ஏற்கனவே பெருந்தொற்றின் விளைவுகளால்

திணறிக்கொண்டிருக்கும் ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள் (Suppliers) மீதும் தொழிலாளர்கள் (Workers) மீதும் வலிந்து திணித்திருக்கின்றன. உதவி செய்திட சட்டப்படி கடமைப்பட்டவர்கள் இல்லை என்றாலும் கூட எந்தவித சமூக பொறுப்பும் இல்லாமல், தங்களுக்கு இருக்கும் வணிக மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஆடை உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களிலிடமிருந்து லாபம் ஈட்டுவது மட்டுமே முக்கியம் என்று செயல்பட்டுள்ளன.

— ஆயினும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் சில பன்னாட்டு ஆயத்த ஆடை பெருநிறுவனங்கள் (MNCs) மேலே குறிப்பிட்டதற்கு மாறாகவும் செயல்பட்டுள்ளன. குறிப்பாக, சொந்தமான தொழிற்சாலைகள் கொண்டிருந்தவை; நீண்டகால வணிக உறவுகளையும் அதிகளவிலான உற்பத்தி (அ) விநியோக தளங்களைக் கொண்டிருந்தவை; உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களை பாதுகாப்பதன் மூலம் பயனடையக்கூடிய பெருநிறுவனங்கள் பொறுப்புடன் செயல்பட்டுள்ளன.

— பெருந்தொற்றின் துவக்கக் காலக்கட்டத்தில் சில பன்னாட்டு ஆயத்த ஆடை பெருநிறுவனங்கள் (MNCs) எடுத்த முடிவுகள் மிகப்பெரிய சீரழிவை எற்படுத்தின. அவற்றின் செயல்பாடுகள் ஆயத்த ஆடை உற்பத்தி சங்கிலியில் ஈடுபட்டிருந்த தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்கள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின. தற்காலிகமான (அ) காலவரையற்ற கதவடைப்பு முதல் உற்பத்தி நிறுத்தம், தொழிலாளர்கள் பணி இழப்பு, கடுமையான அளவிற்கு வருவாய் இழப்பு, அவர்கள் கட்டாய உழைப்புக்கு (அ) உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகரித்தல் வரையிலாக அடுக்குதொடர்போல பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளன. ஒருசில பெருநிறுவனங்கள் (MNCs) பெருந்தொற்றின் இரண்டாம் காலக்கட்டத்தில் மேற்கூறிய இன்னல்களை/சேதத்தை சரிசெய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டன. அவை நிதிஉதவி, உற்பத்தி நிறுவனங்களுக்கு முன்பணம் தருதல், உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட நேரத்திற்கு கூடுதல் கால அவகாசம் நெகிழ்வுத்தன்மை போன்ற சலுகைகளை வழங்கியுள்ளன. அந்த உதவிகள் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து வழங்கப்படும் என்பது மிகப்பெரிய கேள்வியே. ஆனாலும் முக்கியமான பிரச்சினைகளும் சவால்களும் கணிசமான அளவுகளில் தொடர்கின்றன.

— உற்பத்தி சங்கிலியில் உள்ள நிறுவனங்கள் மீதான அரசு மற்றும் தனியார் அமைப்புகளின் கட்டுப்பாடுகள் மோசமான பின்னடைவை சந்தித்துள்ளது. அரசுகளும் பன்னாட்டு பெருநிறுவனங்களும் (MNCs) வேலைச்சூழல் உள்ளிட்ட தொழிலாளர் தரத்தை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டன. அவற்றின் பொறுப்பின்மை, முதலாளிகள் தொழிலாளர்களின் பாதுகாப்பை நலிவுறச் செய்ததுடன் அதற்குறிய எந்த தண்டனையுமின்றி தப்பிக்க உதவியாக இருந்திருக்கிறது.

— கோவிட் பெருந்தொற்றானது உற்பத்தி/விநியோகச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள வணிக அமைப்புகள் மற்றும் தொழிலாளர்கள் மீது குறுகியகால/உடனடியான சீரழிவுகளை மட்டும் விட்டுச்செல்லவில்லை. மாறாக, இச்சங்கிலியின் பலமட்ட அமைப்புகளின் பாகுபாடு கொண்ட அதிகாரங்கள், நெடுங்காலமாக அதில் இருந்துவரும் ஏற்றத்தாழ்வுகளை, சமமற்ற, அநீதியான மதிப்பீடுகளை, தொழிலாளர்களையும், அவர்களின் சங்கங்களையும் நிர்வாகத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் தன்மை ஆகியவற்றை அதிகரித்துள்ளது.